## Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 4/2023** | | |
| **PW/DW/CW** | : | **PW5** | | |
| **Name** | : அழகுராஜா | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : சௌந்தரராஜன் | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( All Accused absent u/s. 355 of BNSS petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **13.02.2026**

---

**முதல் விசாரணை:**

நான் புளிமான்கொம்பை என்ற ஊரில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது மாமா மகள் ஆவார். அ.சா.2 எனது தாய்மாமா ஆவார். திருமணத்தின் போது 1வது எதிரி மணிகண்டனுக்கு எனது தாய்மாமா பாலமுருகன் 60 பவுன் நகையும் 15 லட்சம் பணமும் கொடுத்தார். 1வது எதிரிக்கு 6 பவுன் நகை போட்டார். 6 லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்கள் கொடுத்தார். மற்ற விபரங்கள் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை :**

எனது தாய்மாமா பாலமுருகன் மகள் நதியாவிற்கு 1வது எதிரிக்கு கடந்த 26.02.2020 ம் தேதி உசிலம்பட்டியில் திருமணம் நடந்தது என்றும், திருமணத்தின் போது எனது மாமா நதியாவிற்கு 60 பவுன் நகையும், அவரது கணவருக்கு 6 பவுன் நகையும் 20 மதிப்புள்ள கைகடிகாரமும் 6 லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்கள் வாங்கி கொடுத்தார் என்றும், பின்னர் நதியாவின் கணவர் வீட்டார் ேஹாட்டல் வைத்து கொடுக்க வேண்டும் என்று பிரச்சனை செய்தார்கள் என்றும், அதனால் எனது மாமா பணம் கடன் வாங்கி கடந்த 20.08.2020 ம் தேதி நானும் எனது மாமாவும் உசிலம்பட்டியில் உள்ள நதியாவின் மாமியார் வீட்டிற்கு வந்து அவரது கணவருக்கு ரூபாய் 15 லட்சத்தை எனது மாமா கொடுத்தார் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது

எதிரிக்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ;**

நான் ஆண்டிப்பட்டி தாலுகாவில் புலிமான்கொம்பையில் வசித்து வருகிறேன். எனது மாமா அ.சா.2 தெலுங்கானா மாநிலம்ைஹதராபாத்தில் வசித்து வருகிறார். மேற்படி சீதன பொருட்கள் மற்றும் நகை வாங்கும்போது எனது மாமாவுடன் கடைக்கு சென்றேனா என்றால் இல்லை. மேற்படி பொருட்கள் வாங்கியதற்கான ரசீதை எனது மாமா காவல் நிலையத்தில் கொடுத்ததாரா என்றால் எனக்கு தெரியாது. நான் முதல்விசாரணையில் சொன்னது போல் எனது மாமா திருமணத்திற்காக 60 பவுன் நகையும் 1ம் எதிரிக்கு 6 பவுன் தங்க செயினும் மற்றும் பண்டபாத்திரங்களும் ரொக்கமாக ரூபாய் 15 லட்சம் கொடுக்கவில்லை என்றாலும் நான் உடன் செல்லவில்லை என்றாலும் சரியல்ல. எனது தாய்மாமா என்பதால் அவருக்கு ஆதரவாக அவர் சொல்லி கொடுத்து மேற்படி சீதன பொருட்களையும் பணத்தை கொடுக்கவும் நான் உடன் சென்றதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S.d. Azhaguraja
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.